


துராபி, துராபி என்றொரு பிரகஸ்பதியைப் பற்றிச் சில வாரங்கள் முன்னால் பேசிக்கொண்டிருந்தோம், ஞாபகமிருக்கிறதா? ஒசாமாவின் சடையப்ப வள்ளலாக இருந்த சூடான் தேசத்து அதிபர். அவருக்கு ஏதோ ஒரு சங்கடம் உண்டாகியிருப்பதாகப் பார்த்தோம். என்னவென்பதை விளக்கப் புகுந்தபோதுதான் ரம்ஸி யூசுஃப் குறுக்கே வந்துவிட்டான். உலகம் சுற்றும் வாலிபன். அவன் பின்னால் பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் என்று ரொம்பநாள் நாமும் ஜாலியாகச் சுற்றவேண்டியதாகிவிட்டது. ஆகவே, துராபியைக் கிட்டத்தட்ட மறந்தே போய்விட்டோம். அவரையே மறந்துவிட்ட பிறகு, அவருக்கு நேர்ந்த சங்கடமா நினைவிருக்கும்?

பாதகமில்லை. இப்போது நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

மேற்படி ரம்ஸி யூசுஃப் விவகாரம் ஒருமாதிரி முடிவுக்கு வந்த தருணத்தில், அமெரிக்காவுக்கும் அகில உலகத்துக்கும் ஒசாமா எங்கே இருக்கிறார், அவரது பக்கவாத்திய கோஷ்டிகள் யார் யார், என்னென்ன செய்கிறார்கள், எங்கெங்கே இருக்கிறார்கள் என்று துப்புரவாகத் தெரிந்துபோய்விட்டது.

இதெல்லாம் மூடிவைக்கக் கூடிய விஷயமா என்ன?

அப்போதுதான் அசன் அல் துராபி சிக்கிக் கொண்டார். அடக்கிழவா! சூடான் மக்கள் ஒருவேளை சோறாவது ஒழுங்காகச் சாப்பிடுவதற்கு எத்தனை உலக நாடுகள் உதவி செய்துகொண்டிருக்கின்றன! அமெரிக்கா அதுகாறும் போனால் போகிறதென்று போட்ட பிச்சைப்பணம் எத்தனை மில்லியன் டாலர்கள்! ஐ.நா.வின் உறுப்பு நாடுகளில் பலவும் சூடான் உள்ளிட்ட பல ஆப்பிரிக்க தேசங்களின் வறுமையைப் போக்குவதற்குத் தம்மாலான ஒத்தாசைகளைச் செய்துகொண்டுதான் இருந்தன.

எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு ஒசாமா பின்லேடனுக்கா உதவி செய்கிறாய்? உன்னை ஒரு வழி பண்ணிவிட்டுத்தான் மறுவேலை என்று அமெரிக்கா வீர சபதம் போட்டது.

அமெரிக்காதான் சபதம் போடுகிறதென்றால், அதன் அடிப்பொடிகள் அத்தனைபேரும் சேர்ந்து வீரசபதம் செய்வதாகத்தான் அர்த்தம். அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை விளக்கவே வேண்டாம்.

இந்தச் சபதக் காண்டம் நடப்பதற்கு ரொம்ப நெருக்கமாக ஒரு சம்பவம் நடந்தது. கொஞ்சம் திகிலான சமாசாரம்தான். அந்த விவகாரம் வெளியே வந்தபோதுதான், சூடான் அதிபரை பெஞ்சு மேல் நிற்க வைத்துவிட்டார்கள்.

விவகாரம், ஒரு கடுதாசியில் ஆரம்பித்தது. சூடானின் முன்னாள் ராணுவ உயர் அதிகாரி ஒருவர், தன்னுடைய செகரட்டரி மூலம் ஒசாமா பின்லேடனுக்குக் கொடுத்தனுப்பிய கடுதாசி.

மதிப்புக்குரிய எமிர் அவர்களுக்கு,

இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவுவதாகுக. மிக முக்கியமான, ரகசியமான ஒரு விஷயம். ஆயுதப் பயன்பாட்டுக்குக்குத் தகுதியான தரத்தில் சிறிதளவு யுரேனியம் என்வசம் இருக்கிறது. எப்போதோ சூடான் அரசுக்காக வாங்கிய சரக்கில் மிச்சம். இது என்னிடம் இருக்கிற விஷயம், அரசுக்குத் தெரியாது. நீங்கள் விரும்பினால் இதனை உங்கள் இயக்கத்துக்கு விற்கத் தயாராக இருக்கிறேன். தேவையிருப்பின் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு,

..........

மிகவும் சுருக்கமான கடிதம். ஆனால், மிகவும் ஆச்சரியமான தகவலைக் கொண்டிருந்தது. என்னிடம் ஒரு மூட்டை நல்ல ஆந்திர குண்டு மிளகாய் இருக்கிறது என்பதுபோல, அந்த அதிகாரி சுலபமாகச் சொல்லிவிட்டாலும், தனி மனிதர்களிடம் இருக்கக்கூடிய பொருளல்ல அது. யுரேனியம், ப்ளூட்டானியம் போன்றவை அணு ஆயுதத் தயாரிப்புக்கான மூலப்பொருள்கள். அத்தனை சுலபத்தில் யாருக்கும் கிடைக்காது. இன்று வரையிலுமே கூட உலகில் பல நாடுகளிடம் உண்மையிலேயே அணு ஆயுதங்கள் கிடையாது. காரணம், இவையெல்லாம் கிடைப்பதில் இருக்கிற தட்டுப்பாடுதான். கிடைக்கிற கொஞ்சநஞ்ச சரக்கை வல்லரசுகளும், வல்லரசாகப்போகிற நல்லரசுகளும், இந்த ஸ்டேடஸ்ஸை அடைவதற்கு வெயிட்டிங் லிஸ்ட் மற்றும் ஆர்.ஏ.சி.யில் இருக்கிற பிற தேசங்களுமே பங்குபோட்டுக்கொண்டுவிடும்.

இந்த நிலைமையில் சற்றும் எதிர்பாராவிதமாக ஒரு முன்னாள் ராணுவ அதிகாரி யுரேனியம் வேண்டுமா? என்று அல் காயிதாவிடம் கேட்டால்,

பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை மாதிரி தோன்றலாம். ஆனால் உண்மை. சூடானில் சோறுதான் பிரச்னை. யுரேனியமெல்லாம் கிடைத்துவிடும். எதையாவது செய்து பணம் சம்பாதிப்பதுதான் அங்கே அதிபர் முதல் அவர் வீட்டு வாட்ச்மேன் வரைக்கும் அத்தனை பேருக்குமே உள்ள சவால். பரம தரித்திர தேசம் ஒன்றில் என்னென்னவெல்லாம் நடக்கும் என்பதை, சௌக்கியமாக மூன்றுவேளை சாப்பிட்டுக்கொண்டு, சாட்டிலைட் டி.வி.யில் டாப்டென் பார்த்துக்கொண்டிருக்கிற நம்மால் எல்லாம் அவ்வளவாகப் புரிந்துகொள்ள முடியாது.

உடனடியாக அல் காயிதாவின் ஆயுத வர்த்தக மேலதிகாரிகள், சம்பந்தப்பட்ட முன்னாள் ராணுவ அதிகாரியைச் சென்று சந்தித்தார்கள். ஏழு அல்லது எட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. பேரம் பேசிப்பேசி இறுதியில் ஒன்றரை மில்லியன் அமெரிக்க டாலர் விலை நிர்ணயிக்கப்பட்டது.

வங்கி சம்பந்தமே கூடாது. மொத்தப் பணமும் நோட்டுகளாக நேரடியாகக் கொடுக்கப்படவேண்டும். தவணைகள் கூடாது. முழுப்பணத்தையும் மொத்தமாகக் கொடுத்துவிட்டு, சரக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவானது. ரசீது கிடையாது. வேறு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. பெட்டிக்கடையில் வெற்றிலை வாங்குவது போலத்தான் வாங்கவேண்டும்.

அல் காயிதா சம்மதித்தது. பணம் கைமாறியது. அல் காயிதாவின் ஆயுத விஞ்ஞானிகள் குழு ஒன்றை, அந்த ராணுவ அதிகாரி, ஒரு ரகசிய இடத்துக்கு அழைத்துப் போனார். அங்கே மூன்று அடி நீளமும் ஒன்றே முக்கால் அடி விட்டமும் உள்ள ஒரு சிலிண்டர் இருந்தது. அதுதான். அதற்குள்ளாகத்தான் சரக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள்.

பார்க்க வந்தவர்கள் வாயடைத்துப் போனார்கள். அவர்களுக்கு யுரேனியம் கிடைத்துவிட்டால்

அதை வைத்து எப்படி ஆயுதம் செய்வதென்று தெரியும். ஆனால், அளிக்கப்படும் யுரேனியத்தின் தரத்தைப் பரிசோதிப்பது எப்படி என்று தெரியாது.

"நீங்கள் கவலைப்படாமல் எடுத்துப் போகலாம். நிச்சயம் இது உங்கள் நோக்கத்துக்கு உதவும். ஏனென்றால், அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்துடன்தான் சூடான் அரசே இதை வாங்கியது" என்றார் அந்த அதிகாரி.

சூடானுக்கு எதற்கு அணு ஆயுதம்? என்று அவர்களுக்குக் கேட்கத் தோன்றவில்லை. இப்போது மூலப்பொருளை அதிகாரி கறுப்பு மார்க்கெட்டில் விற்பது போல, ஆயுதமே தயாரித்து, அரசாங்கமே விற்கும்போல.

அந்த சிலிண்டர் மிகுந்த பாதுகாப்புடன் வண்டியில் ஏற்றப்பட்டது. பத்திரமாகக் கொண்டுபோகப்பட்டு, அல் காயிதாவின் ரகசிய இடம் ஒன்றில் பதுக்கப்பட்டது.

அல் காயிதா தனது சரித்திரத்தில் செய்த மாபெரும் மடத்தனமான காரியம் என்று இதனைச் சொல்லலாம்.

யுரேனியத்தில் ஏராளமான ரகங்கள் உண்டு. எல்லா யுரேனியத்திலும் ஆயுதம் செய்யமுடியாது. அணு ஆயுதம் செய்யப் பயன்படும் யுரேனியம் HEU என்று அழைக்கப்படும் Highly Enriched Uranium. இது சாதாரணமாக ஒன்றரை மில்லியன் டாலருக்கெல்லாம் கிடைக்காது. என்ன விலைக்குக் கிடைக்கும் என்பது அத்தகைய ஆயுதங்களை வைத்திருக்கும் அரசுகளுக்கு மட்டும்தான் தெரியும். யூகத்தில் கூட ஒரு தோராய விலை சொல்லிவிடமுடியாது.

சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரியின் வசம் இருந்த யுரேனியம், ஒருவேளை செராமிக் கண்ணாடிகளுக்கு வண்ணம் பூசுவதற்குப் பயன்படும் சாது ரக யுரேனியமாக இருக்கவேண்டும். அவருக்கும் விவரம் தெரியவில்லை, வாங்கியவர்களுக்கும் பரிசோதித்து உண்மை அறியத் தெரியவில்லை.

அந்த யுரேனியத்தைப் பயன்படுத்தி எப்படி ஆயுதம் செய்யலாம் என்று கடுமையாக யோசித்து, ப்ளூ ப்ரிண்ட்டெல்லாம் தயாரித்து, நீண்ட, விரிவான ஆய்வுகளெல்லாம் மேற்கொண்டு, பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்து ஆயுதச் சாலை நிறுவி, வேலையை ஆரம்பித்தபோதுதான் உண்மை தெரியவந்தது. அந்த யுரேனியத்தால் ஒரு வெங்காய வெடி எழுப்பும் சப்தத்தைக் கூட எழுப்ப முடியாது!

ஒன்றரை மில்லியன் டாலர்கள். வாங்கிய ராணுவ அதிகாரி ஆள் எங்கே போனார் என்றே தெரியவில்லை. அல் காயிதா விஞ்ஞானிகள் அவமானத்தில் குன்றிப்போய்விட்டார்கள். அத்தனை பெரிய செலவு செய்து ஓர் ஏமாற்றம். துக்கம் தாளாமல் எங்கே, யாரிடம் புலம்பினார்களோ தெரியவில்லை.

விஷயம் வெளியே வந்துவிட்டது. அல் காயிதாவுக்கு யுரேனியம் விற்ற அதிகாரியை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. ஆனால், சூடான் அரசு முன்னெப்போதோ யுரேனியம் வாங்க முயற்சி செய்திருக்கிறது என்கிற தகவலில் வெகுண்டு எழுந்தார்கள். உடனே ஐ.நா.விடம் புகார்ப்பட்டியல் அளிக்கப்பட்டது. தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவளிக்கும் சூடான் அரசுக்குச் செய்துவரும் உதவிகளை உடனே நிறுத்தவேண்டும்.

அமெரிக்காவும் அதன் தோழமை தேசங்களும் மாற்றி மாற்றி மண்டையிடி கொடுத்ததில், ஐ.நா. தேர் கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. சூடானுக்கு ஐ.நா. பொதுச் செயலாளரிடமிருந்தும் பாதுகாப்பு கவுன்சிலில் இருந்தும் எச்சரிக்கை நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. அமெரிக்காவின்

நட்பு நாடுகள் அனைத்தும் சூடானுடன் அனைத்துப் பொருளாதார உறவுகளையும் முறித்துக்கொள்ளத் தயாராகி, அறிவித்துவிட்டன.

சூடான் மட்டுமல்லாமல், எந்தெந்த நாடுகளில் அல் காயிதாவின் முகாம்கள் உள்ளனவோ, அந்த நாடுகளுக்கெல்லாமும் இந்த அச்சுறுத்தல் அனுப்பிவைக்கப்பட்டது.

நீங்கள் அல் காயிதாவுக்கு அடைக்கலம் தருகிறீர்களா? உங்களுக்கான உதவிகளை நாங்கள் உடனடியாக நிறுத்திவைக்கிறோம்.

1995-ம் ஆண்டு எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக், எத்தியோப்பியாவுக்கு அரசு முறை சுற்றுப்பயணமாகச் சென்றிருந்தார். அங்கே அவரைக் கொலை செய்ய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதனைச் செய்தது எகிப்தைச் சேர்ந்த ஒரு சிறிய போராளிக் குழுதான் என்றபோதும், விசாரணையில் அந்தக் குழுவில் இருந்த சிலர், சூடானில் ஒசாமா பின்லேடனிடம் பயிற்சி பெற்றவர்கள் என்று தெரிய வந்தது.

அதற்குமேல் சூடான் அரசை விட்டுவைக்க யாரும் தயாராக இல்லை. சூடான் மீது மிகப்பெரிய அளவில் தடைகள் விதிப்பதற்கு ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில் நடவடிக்கை மேற்கொள்ளத் தொடங்கியது.

துராபி மாட்டிக்கொண்டார்.

அல் காயிதா சங்காத்தத்துக்கு அதோடு மங்களம் பாடும்படி அவரது அமைச்சரவை சகாக்களும் சூடானின் மிகப்பெரிய பண முதலைகளும் வர்த்தகர்களும் இன்னபிறரும் அவரைத் துளைக்க ஆரம்பித்தார்கள்.

இதுதான் சாக்கு என்று அதுநாள் வரை ஒசாமா பயத்தில் கொஞ்சம் அடங்கியிருந்த கிறிஸ்துவத் தீவிரவாத இயக்கங்களும் வீதிக்கு வந்து, துராபிக்கு எதிராகக் கோஷமிட ஆரம்பித்தன. இந்த இயக்கங்களைக் கொம்புசீவி விடும் வேலையை அமெரிக்க உளவுத்துறை அன்றே தொடங்கிவிட்டது.

வலுவான ஆயுதப் பின்னணியுடன் ஓர் உள்நாட்டு யுத்தத்துக்கேகூட சூழ்நிலையை உருவாக்கிவிடலாம் என்பது சி.ஐ.ஏ.வின் எண்ணம்.

படாதபாடுபட்டு ஆட்சியைப் பிடித்திருந்தவர்கள், துராபி என்கிற தங்கள் மகத்தான தலைவரையே கூட இழக்கத் தயாராகிவிட்டார்கள் என்று துராபியின் அந்தரங்க உளவு அதிகாரிகள் மோப்பம் பிடித்து வந்து சொன்னார்கள்.

இழப்பது என்றால்? போட்டுத்தள்ளுவதுதான்; வேறென்ன? அப்படிச் செய்யும் பட்சத்தில், அமெரிக்காவின் கோபம் தணியும். ஆட்சிக்கு எந்தப் பிரச்னையும் வராது. பொருளாதார உதவிகளும் வழக்கம்போல் கிடைக்கும்.

இது எல்லாவற்றையும் துராபி தூக்கி நிறுத்தி அலசிப் பார்த்தார். எல்லாமே நெருக்கடிதான். எல்லாமே முக்கியம்தான். எதுவும் அலட்சியப்படுத்தக் கூடிய விஷயமல்ல.

ஆனால், ஒசாமா பின்லேடனும் அவருக்கு முக்கியம். அந்த நட்பு அப்படிப்பட்டது!

மிகுந்த (அ)தர்மசங்கடத்தில் சிக்கிக்கொண்டார் துராபி.